[10th March 1964

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், கொள்முதல் செய்யக்கூடிய அரிசிக்கு உடனடியாக பணம் பட்டுவாடா ஆவதில்லை என்று சொல்லப்படுகிறது. உடனடியாகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தால் மில் சொந்தக்காரர்கள் தாராளமாக அரிசி கொடுக்க முன் வருவார்கள். அதற்கு ஏதாவது வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த விதமான தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : அரிசி மில் சொந்தக்காரர்களிடமிருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்வதை ஆட்சேபித்து உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. அது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? என்ன மேல் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி தகவல் ஒன்றும் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, கூலிக்கு நெல்லை அரைப்பார்கள் இத்தனை மூட்டை தரவேண்டும் என்ற வரம்பு இருந்தாலும் அதற்கு மேலும் தரவேண்டும் என்று ரெவின்யூ அதிகாரிகள் மூலமாகச் சொல்லப்படுகிறது. மேற்கொண்டு அரிசி அரைப்பவர்களிடமிருந்து பெற்று அதைப் பொது மார்க்கெட்டில் அதிக விலைக்கு மில்லர்கள் விற்கிறார்கள். குறிப்பிட்ட நிர்ணய வரம்பு வரையிலும் அரிசி அரைப்பவர் களிடமிருந்து வாங்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : கூலிக்கு அரைப்பவர்கள் சொந்த நெல்லை அரைக்கக் கூடும் அல்லது விலைக்கு வாங்கிய நெல்லை அரைக்கக் கூடும். ரெவின்யூ அஃபிஷியல்ஸ் எப்படி கட்டாயமாக கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருப்பார்கள் என்று தெரியவில்லை. கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தாலும் எந்த முறையில் அவர்கள் கட்டுப் படுத்திக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

Co-operative Housing Societies

* 200 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have issued any order prohibiting the opening of new Co-operative Housing Societies due to emergency;

(*b*) the number of applications for starting new societies pending with the Registrar as on 30th November 1963; and

(*c*) whether the Government have stopped the payment of loans for constructing houses for the existing societies?

10th March 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No such orders have been issued.

(*b*) No proposals for organisation of Co-operative Housing Societies are pending in the Office of the Registrar of Co-operative Societies.

(*c*) Yes. Government have issued instructions to the Registrar of Co-operative Societies in December 1962 that no new loans need be sanctioned to the Co-operative Housing Societies for the construction of new houses under the State Housing Schemes, in view of the National Emergency. The Government have, however, allotted a sum of Rs. 6 lakhs under Low Income Group Housing and Rs. 10 lakhs under Middle Income Group Housing Schemes from out of the funds obtained from the Life Insurance Corporation of India, for grant of loans to Co-operative Housing Societies.

திரு. எம். வி. கரிவேங்கடம் : நெருக்கடி நிலை ஓரளவுக்கு தளர்ந்துள்ளதாகக் கருதப்படும் நிலையில் மேலும் கூடுதலாக தொகை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ராஜ்ய சர்க்கார் நெருக்கடி நிதி நிலை இன்னும் தளரவில்லை. நாட்டின் நெருக்கடி நிலை எப்படி இருக்கிறதோ அவ்வாறு தான் ராஜ்ய சர்க்காரின் நிதி நிலையும் இன்னும் கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான் பணம் கொடுக்க முடியவில்லை.

* 201 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that in the Weavers' Housing Colony of Thingalur Weavers' Co-operative Society at Erode, two houses have been occupied by unauthorised persons, one by a doctor and the other by a Sub-Inspector of Police; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A police station and a hospital were sanctioned to the Thingalur village in the year 1962. As the Sub-Inspector of Police and the doctor could not secure suitable residence for their stay, they had stayed in the colony houses.

* 202 **கேள்வி.—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராமங்களில் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் சொந்தமாக வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் 5 ஏக்கருக்கும் குறைவாக குத்தகையாக விவசாயம் செய்பவர்களுக்கும் கிராமிய கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்தில் 1/5 பாகம் பங்குத்தொகை கட்ட வேண்டியதை எடுத்துவிட்டு முழுப்பணம் கடனாகக் கொடுக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such proposal.